செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1059 | 1970 ஜூன் 18 வியாழக்கிழமை ★ | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka RECEIVED 2 Periodicals Division Library

## வாளாலும் கத்தியாலும் வெட்டப்பட்டு

# 11 பிள்ளைத்தந்தையான டாக்டர் கோரக் கொலை



அலைகள் உருண்டு வந்து மோதும் கடற்கரையின் வெண்மணலில் பந்தாட அழைக்கின்றாரா பருவப் பாவையான மாரனெல். இவர் ஆடுவதிலும் பாடுவதிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

களுத்துறை, ஜூன் 17

**பதினொரு பிள்ளைகளின் தந்தையான டாக்டர் ஒருவர் வாளால் வெட்டப்பட்டு கத்தியால் குத்தப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டார். களுத்துறை வடக்கு, கல்பாத்த கிராம ஆஸ்பத்திரியின் பிரதம டாக்டரே இவ்வாறு கொலையுண்டார்.**

வில்பிரட் டி- சில்வா என்னும் இந்த டாக்டர், வாளால் வெட்டப்பட்டு கத்தியால் குத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் காயங்களுடன் நாகொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்க எடுத்துச் செல்லப்படுகையில் மரணமானார்- கல்பாத்த கிராம ஆஸ்பத்திரிக்கு இந்த டாக்டரே பொறுப்பாக இருந்தார்-

பாணந்துறையைச் சேர்ந்த பின்வத்த இவரது சொந்த ஊராகும்- பதினொரு பிள்ளைகளின் தந்தையான இந்த டாக்டரின் மனைவியும் பிள்ளைகளும் பின்வத்தையில் தங்கி இருக்க டாக்டர், கல்பாத்த கிராமத்தில் வீடொன்றில் தங்கியிருந்தார்

டாக்டர் சில்வா இன்று காலை ஆறு மணியளவில் மலசலகூடத்துக்குச் சென்றுவிட்டு வீட்டுக்கு வருகையில், வழியில் காத்திருந்த இரு கொலைஞர்கள் டாக்டரை இவ்வாறு வெட்டியிருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றது-

வெட்டுப்பட்ட டாக்டரை அயலவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்- இச்சம்பவம் சம்பந்தமாக களுத்துறை வடக்கு பொலீஸ் இன்ஸ்பெக்டர் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளார்-

(ர)

### விமுட்சி



என்னுங்க, விவசாயிகளுக்கு அடையாள அட்டை கிடைக்கப் போகுதாமே!

ஆமாங்க, கொழும்புத் தார் ரோட்டிலே மினிமோக்குடன் விவசாயம் செய்ய முற்பட்ட சில போலிகளைப் பிடிக்க வேறென்ன வழி?

## பிரதமர் வந்தால் வரவேற்பு

### யாழ். முனிசிபல் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தால் மட்டுமே அவரை வரவேற்று கௌரவிப்பது என யாழ்ப்பாணம் மாநகர சபை முடிவு செய்தது-

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்து, அவருக்கு வரவேற்பு அளித்து கௌரவிக்க வேண்டும் என்று, யாழ். மாநகரசபை உறுப்பினர் ஜனாப் எம். ஏ. ஸி. எஸ். காதர் பிரேரணை ஒன்று சமர்ப்பித்திருந்தது தெரிந்ததே.

நேற்று நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் இந்தப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, முன்னை நாள் மேயர் திரு. எஸ். நாகராஜா திருத்தப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தார்.

பிரதமர் திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்து, அவருக்கு வரவேற்பு அளிப்பதற்குப் பதிலாக, அவர் யாழ்ப்பாணத்துக்கு வரும் சந்தர்ப்பத்தில் அவரை வரவேற்று கௌரவிக்கலாம் என்று அந்தத் திருத்தப் பிரேரணையில் திரு. நாகராஜா குறிப்பிட்டிருந்தார்.

இது ஒரு பிரச்சினைக்கு உரிய விஷயம் என்று குறிப்பிட்ட மேயர் திரு. டி. எஸ். துரைராஜா, இது பற்றி ஆராய்வதை மற்றொரு கூட்டத்துக்குப் பின்போடலாம் என்று கூறினர்.

ஆரம்பத்தில் பிரேரணையைச் சமர்ப்பித்த ஜனாப் எம். ஏ. ஸி. எஸ். காதரும், மற்றும் மாநகர சபை உறுப்பினர்களான திரு. எம். எஸ். பேரின்பநாயகம், திரு. எஸ்- எம்- மார்க்கண்டு, ஜனாப் எம். ஜி. பஷீர், திரு. வி. கே. தெய்வேந்திரம் ஆகியோரும் மேயரின் கூற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, "ஒத்திப் போடுவதானால் நாங்கள் இங்கே இருக்க மாட்டோம்" என்று கூறி வெளிநடப்புச் செய்தனர்.

பின்னர், மீண்டும் மண்டபத்துக்குள் பிரவேசித்த அவர்களுள் திரு. பேரின்பநாயகத்தைத் தவிர மற்ற நால்வரும் மேயர் இருந்த இடத்துக்கு முன்னால் வந்து நின்று கொண்டு கூட்டத்தைத் தொடர்ந்து நடக்கவிடாமல் எதிர்ப்புக் குரல் எழுப்பினர்.

இந்த விஷயம் வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டதை அடுத்து, திரு. நாகராஜா கொண்டுவந்த திருத்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

பதினொரு அங்கத்தவர்கள் இந்தத் திருத்தப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர். ஆறு அங்கத்தவர்கள் எதிர்த்து வாக்களித்தனர். மற்றும் ஐந்து அங்கத்தவர்கள் கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லை.

(ஈ-220)

## இரத்தினபுரி, மன்னார் தேர்தல் ஆட்சேப மனுக்கள் தாக்கல்

இரத்தினபுரி எம்- பி- திரு- நந்த எல்லவெல, மன்னார் எம்- பி- திரு- வி- ஏ- அழகக்கோன் ஆகியோரின் தெரிவை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் [illegible]ப்பட்டன-

[illegible] எல்லவெலயின் தெரிவை [illegible]சேபித்து திரு- பி- பீ- விஜேசுந்தர வழக்கு தொடர்ந்தார்- திரு- எல்லவெலயும் வேறு இருவரும் கிரிமினல் குற்றத்திற்காக மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மூன்று மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர் என்றும் இத்தண்டனை உயர் நீதிமன்றத்தில் ஊர்ஜிதம்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னைத் திரும்ப அழைத்துச் செல்லா விட்டால்

# என்னுடைய குழந்தையின் கழுத்தைத்திருகுவேன்என்றார்

## கொலை வழக்கில் சாட்சி வர்ணனை

"என்னைத் திரும்ப அழைத்துச் செல்லவில்லையென்றால், நான் உனது குழந்தையின் கழுத்தைத் திருகி விடுவேன் என்று சொல்லிக் கொண்டே, லிடா பொன்சேகா என்னைப் பயமுறுத்தினார். நான் அவரை லுணுவைக்கு அழைத்துச் சென்றேன். நானும் அவரும் ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்தோம். அப்பொழுது அவர் ஒன்றும் கதைக்கவில்லை"-

கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் திரு- தொலின் மெண்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கொலை வழக்கொன்றில் சாட்சியமளித்த பதுளை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் டக்ளஸ் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வழக்கில், கல்கிசையைச் சேர்ந்த கருணதாச டாபரே என்பவரைக் கொலை செய்ததாக, கல்கிசை மொஸ்க் வீதியைச் சேர்ந்த சாம்சன் பெர்னாண்டோ சோமபால டாபரே, ஹெட்டியாராச்சிகே பொடி மெனிக்கே ஆகியோர் மீது குற்றம் சாட்டி கல்கிசை பொலீசார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

கான்ஸ்டபிள் டக்ளஸ் பெர்னாண்டோ தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"டாக்டர் பொன்சேகாவை எனக்குத் தெரியும். லிடா பொன்சேகாவின் தந்தை அவர். ஒரு நாள், தனது மகளை ஒரு கொன்வென்டில் சேர்க்கப் போவதாகவும், எனவே அவரை பதுளையில் உள்ள எனது வீட்டுக்கு அனுப்ப இருப்பதாகவும் டாக்டர் என்னிடம் கூறினார். அதன் பிறகு திருமதி பொன்சேகாவின் தென்னந்தோட்ட மானேஜரும் நானும் கல்கிசையில் உள்ள ஒரு இடத்துக்குச் சென்றோம். அங்கே காலஞ் சென்றவரையும் மூன்றும் எதிரியையும் லிடாவையும் நான் கண்டேன்.

"நான், லிடாவிடம் என்னுடன் பதுளைக்கு வரும்படி கூறினேன். பதுளைக்குச் செல்வதானால் தமது பெற்றோரிடமிருந்து அனுமதி பெற வேண்டும் என்று அவர் கூறினார். நான் லுணுவைக்குப் போய் லிடாவின் பெற்றோரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, மீண்டும் காலஞ்சென்றவரின் இல்லத்திற்குச் சென்றேன்.

"அன்று, என்னுடன் வரும்படி நான் லிடாவிடம் கேட்ட பொழுது, அங்கே இருந்த காலஞ்சென்றவர், லிடாவை நான் அழைத்துச் செல்வதாக ஒரு கடிதம் எழுதித் தரும்படி என்னிடம் கேட்டார்.

"அவரிடம் கடிதம் எழுதிக் கொடுத்து விட்டு, 25-ம் திகதி லிடாவுடன் நான் பதுளைக்குப் புறப்பட்டேன். அங்கே மூன்று தினங்கள் எனது குடும்பத்தினருடன் லிடா வசித்து வந்தார்.

"மூன்றாவது நாள் அவர் மீண்டும் தன்னை லுணுவைக்கு அழைத்துச் செல்லும்படி என்னை வற்புறுத்தினார். நான் அவரை அழைத்துச் செல்லா விட்டால், எனது குழந்தையின் கழுத்தைத் திருகிக் கொல்லப் போவதாகவும் அவர் பயமுறுத்தினார். நான் அவரை மீண்டும் லுணுவைக்கு அழைத்துச் சென்றேன். பஸ்ஸில் நாங்கள் பிரயாணம் செய்த பொழுது அவர் என்னுடன் கதைக்கவில்லை. அன்று இரவு பத்து மணிக்கு, லிடாவின் தந்தை டாக்டர் பொன்சேகா வசித்து வந்த லுணுவை வீட்டுக்கு வந்தோம். நான் அவரை டாக்டர் பொன்சேகாவிடம் கையளிக்க முயன்ற பொழுது, அவர் மீண்டும் என்னை எச்சரித்தார். அப்பொழுது, லிடா புத்தி பேதலிப்பால் கஷ்டப்படுவதாக நான் உணர்ந்து கொண்டேன்"

மேல் விசாரணை ஜுன் 22-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (க)

## இரட்டைக் கொலை புரிந்த இராணுவ டாக்டர் மரணம்

செகந்திராபாத் இரட்டைக் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ராணுவ டாக்டர் கேப்டன் கே. நாகராஜு உஸ்மானியா ஜெனரல் ஆஸ்பத்திரியில் இறந்து போனார்.

மூக்கிலிருந்து திரவம் ஒன்று வடிந்ததைத் தொடர்ந்து மரணம் நேரிட்டது என்று ஆஸ்பத்திரி அதிகாரிகள் தெரிவித்தனர். அவருக்கு மூன்று தினங்களுக்கு முன்பு தான் ஆபரேஷன் ஒன்று நடந்தது.

கடந்த பிப்ரவரி மாதத்தில் அவருடைய (டாக்டர் நாகராஜுவின்) மனைவி லிலியன்லாங்கும், ஒரு வயது குழந்தையும் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக எல்லைப் பகுதியில் பணியாற்றி வந்த அவர் மே 5-ம் திகதி கைது செய்யப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டார்.

மே 6-ம் திகதியன்று அவர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார். பத்து நாள் காவலில் வைக்கும்படி கோர்ட் உத்தரவிட்டது. அவர் கோர்ட்டில் இருந்து காவலில் வைப்பதற்காக மத்திய குற்றப் பிரிவு இலாகா நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட போது முதல் மாடியிலிருந்து குதித்து தப்பி ஓட முயன்ற போது படுகாயமுற்றார். உடனே உஸ்மானியா ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் இன்று இறந்து போனார்.

இரட்டைக் கொலை வழக்கு சம்பந்தமாக பொலீஸ் தரப்பில் கூறப்பட்டதாவது:—

டாக்டர் நாகராஜு தமது மனைவி லிலியன் லாங்கையும், குழந்தையையும் கொன்ற பிறகு அவர்களின் உடல் உறுப்புக்களை ஹுஸ்ஸைன் நகர் ஏரிப் பகுதியில் வீசி எறிந்தார். பின்னர் பம்பாய்க்குச் சென்று ஒரு "லேடி" டாக்டரை மணந்து கொண்டார்.

டாக்டர் நாகராஜு பின்னர், லிலியன் லாங்கின் பெற்றோர்களுக்கு எழுதிய கடிதத்தில் அவர்களுடைய மகள் தம்மிடம் தகவல் எதுவும் தெரிவிக்காமல் எங்கேயோ போய் விட்டதாகத் தெரிவித்திருந்தார். சந்தேகமுற்ற பெற்றோர்கள் தங்கள் மகள் காணாமல் போனது குறித்து பொலீஸில் புகார் கூறினார்கள். இது குறித்து பொலீஸார் நடத்திய விசாரணையிலிருந்து லிலியன் லாங், மற்றும் அவளுடைய குழந்தையின் மரணத்திற்கு டாக்டர் நாகராஜுவே காரணம் என்று கண்டு பிடித்தனர். (க)

## திருடப்பட்ட இயந்திரத்தை வைத்திருந்தவர் குற்றவாளி

திருகோணமலை, ஜுன் 17

தண்ணீர் இறைக்கும் யந்திரம் ஒன்றைக் களவாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் எதிரி, விசாரணையின் இடையில் களவு போன பொருளை வைத்து இருந்த குற்றத்திற்குத் தான் குற்றவாளி என்று ஒப்புக் கொண்டார்.

1000 ரூபா பெறுமதியான தண்ணீர் பம்ப் ஒன்றைக் களவாடியதாக பாருக் கான் என்பவர்மீது பொலீஸார் குற்றஞ்சாட்டி இருந்தனர்.

வழக்கு விசாரணையில், ரோகிணியம்மா என்ற பெண் சாட்சியமளிக்கையில், சம்பவதினம் அதிகாலையெழுந்து கிணற்றடிக்குச் சென்ற பொழுது தண்ணீர்ப் பம்ப் களவு போனது தெரியவந்தது என்றார்.

இராஜமாணிக்கம் சாட்சியமளிக்கையில், "சம்பவதினம் நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். எனது மனைவி ரோகிணியம்மா பம்ப் களவுபோன விஷயத்தைத் தந்தி மூலம் தெரிவித்ததைத் தொடர்ந்து நான் திருமலை திரும்பினேன். பின்னர் பொலீஸ் நிலையத்தில் களவு போன பம்பை அடையாளம் கண்டேன்" என்றார்.

டபிள்யூ. கலிசன் என்ற டாக்ஸி சாரதி சாட்சியமளிக்கையில், "ஒருநாள் எதிரி எனது டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு முதலிக்குளம் சென்றார். அங்கு வைத்து தண்ணீர் பம்ப் ஒன்று காரில் ஏற்றப்பட்டது" என்றார்.

முத்துமாரி பிச்சன் நாடாரும் சாட்சியமளித்த பின்னர், எதிரி தான் களவுபோன பொருளை வைத்து இருந்த குற்றத்திற்கு குற்றவாளி என்று ஒப்புக் கொண்டார்.

திருமலை நீதவான் திரு. விக்ரமசேகரா, எதிரியை அடையாளம் கண்டு தண்டனை விதிப்பதை ஜுன் 26-க்கு ஒத்தி வைத்தார். (க-287)

## கோழி திருடினார்கள் என்று மூன்று இளைஞர்கள் கைது

கோழிகள் களவாடப்பட்டதாகக் கிடைத்த முறைப்பாட்டின் மீது நுகேகொட மிரிகான பொலீஸார் எக்வத்தையிலுள்ள ஒரு வீட்டைச் சோதனையிட்டு, இரண்டு வாத்துகளையும், உரித்த கோழிகளையும் கைப்பற்றினர்.

மிரிகான கோட்டே வீதியைச் சேர்ந்த திரு. ஏ. பண்டார வீரசேகரா தனது கோழிக் கூட்டிலிருந்த இருபது வைட் லெகோர்ன் கோழிகள், இரண்டு வாத்துகள், மற்றும் அநேக கோழிக் குஞ்சுகள் திருடப்பட்டுள்ளதாக பொலீஸில் புகார் செய்திருந்தார்.

பொலீஸ் இன்ஸ்பெக்டர் நடாத்திய தேடுதலால் திருடப்பட்ட கோழிகளில் ஒரு பகுதி அகப்பட்டது:

இது சம்பந்தமாக கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்கள் கொழும்பு தெற்கு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவர். (க-15)

## விடு உடைத்து உட்புகுந்ததாக வழக்கு

திருகோணமலை, ஜுன் 17

வீடு உடைத்துப் புகுந்ததாக எஸ். இராமலிங்கம் என்ற நபர் மீது பொலீஸார் தொடர்ந்த வழக்கு அண்மையில் திருமலை நீதவான் திரு. விக்ரமசேகரா முன் விசாரணைக்கு வந்தது.

சம்பவதினம் சப்தம் கேட்டு வீட்டுக்குள் தேடுதல் நடத்திய பொழுது எதிரி குசினிக்குள் ஒளித்து இருந்தது கண்டு பிடிக்கப்பட்டதாக புராஸிகியூஷன் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இக்கட்டத்தில் வழக்கு விசாரணை ஜுலை 28-க்கு ஒத்தி வைக்கப்பட்டது. (க-287)

## பம்பாயில் பயங்கர புயல்

பயங்கரப் புயலினால் பம்பாய் நகர் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது. வீடொன்று சரிந்ததினால் இருவர் உயிர் இழந்ததுடன் மூவர் பலத்த காயத்துக்குள்ளானார்கள். (க-7)

### நல்ல தீர்மானம்

விவசாய அமைச்சர் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கத் தீர்மானித்திருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது- உண்மையில் இந்த அடையாள அட்டைகள் விவசாயிகளையும் போலி விவசாயிகளையும் இனம் கண்டு கொள்ளப் பெரிதும் உதவும் என்பது வெளிப்படை- கடந்த ஆட்சிக் காலத்தில் அதிக உணவு உற்பத்தி இயக்கத்தின்போது சில நாகரிகப் பேர்வழிகளும் விவசாயிகள் என்று தங்களுக்குத் தாங்களே விலாசம் இட்டுக் கொண்டார்கள்- இவர்கள் விலாசமிட்டதெல்லாம் "மினிமோக்குகளும், லான்ட்ரோவர்களும்" பெறுவதற்கு லைசன்ஸ் பிடுங்கிக் கொள்ளவே என்றும் கூறப்படுகிறது- இதற்குச் சான்றாகக் கொழும்பின் பிரபல திருமணங்களிலும், பந்தாட்ட நிலையங்களிலும் இந்த மோட்டார் வண்டிகள் காட்சியளித்துள்ளனவாம்- அடையாள அட்டைகள் இந்தப் பிறழ்ச்சிகளை நீக்கிவிடுமல்லவா?

தந்தி


தந்தி
சிறு விளம்பரங்கள்

மருந்து

Sexofirm பலவீனம். அகாலமாக இந்திரியம் வெளியாகுதல், நரம்பு தளர்ச்சி, காம சக்தியின்மை ஆகியவற்றுக்கு (Sebringen) நிவாரணம் அளிக்கவல்லது. Sexofirm ஆண் - பெண் இருபாலாருக்கும் அதிக சக்தியை கொடுக்கும். உத்தரவாதமுள்ள ஜெர்மன் மருந்து. கிடைக்குமிடம்: ஏக விநியோகஸ்தர்கள்:— சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், மெயின் வீதி, கொழும்பு - வோர்ட் வீதி, கண்டி. வி- பி- பி- ஆடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். 25 கெப்ஸுல்கள் ரூ. 11/50.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னையும் குழந்தைகளையும் கைவிட்டு

# நந்தாவதியுடன் அவர் கும்மாளம் அடிக்கிறார்

### தாபரிப்பு வழக்கில் மனுதார் சாட்சியம்

"எனது கணவர் நந்தாவதியுடன் கூடிக் குலாவி கும்மாளம் அடிக்கிறார். அவளுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கிறார். ஆனால் நான் துன்பத்திலும் துயரிலும் வாடுகின்றேன்."

கொழும்பு மாஜிஸ்திரேட் திரு. ஈ. எவ். டி. சில்வா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட தாபரிப்பு வழக்கொன்றில் மனுதாரரான எமலிஹாமி மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

வெல்லம்பிட்டி, கொட்டுவிலயைச் சேர்ந்த விதான பதிரானகே எமலிஹாமி என்பவர் தனது கணவரான யட்டியானவைச் சேர்ந்த பி. தனபாலாவுக்கு எதிராக, தனக்கும் தன் இரு பிள்ளைகளுக்கும் தாபரிப்பு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரரான எமலிஹாமி தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:—

"எதிர்மனுதார் எனது சட்டரீதியான கணவர் அவர் மூலம் எனக்கு இரு குழந்தைகள் உண்டு. கடந்த இரு வருடங்களாக எம்மைக் கைவிட்டுவிட்டார். நோயாளியான எனது பிள்ளைகளைப் பராமரிப்பது மிகவும் தலைவேதனையாயுள்ளது.

"ஆரம்பத்தில் நன்கு நடந்த என் கணவர் போகப் போக எங்களைத் துன்புறுத்தினார். இதனால் நாம் பிரிய நேரிட்டது.

"யட்டியாவையில் கட்டிட வேலையில் ஈடுபட்டிருக்கும் என் கணவர் வீட்டில் பல ஆண்கள், பெண்கள் வசிக்கின்றனர். அவர்களுள் அவரின் ஆசைநாயகி நந்தாவதியும் வசிக்கின்றார்.

"ஆசைநாயகி மேல் உள்ள மோகத்தால் தான் அவர் எம்மைக் கைவிட்டு விட்டார். என் கணவர் வெரகெட்டியா, பெலியத்தையிலிருந்து கொழும்புக்கு மரக்கறி அனுப்புவதால், ஒரு நாளைக்கு ரூ. 40-க்கு மேல் சம்பாதிக்கிறார்" என்று கூறினார்.

எதிர் மனுதாரரான தனபால சாட்சியமளிக்கையில், பிள்ளைகளின் தந்தை தான் என்பதை ஒப்புக் கொண்டார். ஆனால், தனக்கு ஆசைநாயகி கிடையாதென்றும், தான் சாதாரண தொழிலாளி யென்றும் கூறினார்.

இரு பிள்ளைகளுக்கும் மாதம் ரூ. 35 வழங்கும்படி நீதிபதி தீர்ப்பு அளித்தார். (கு-15)

### ராணுவச் சட்டம் பிரகடனம்

இஸ்தான்புல், ஜூன். 17

துருக்கியின் இரண்டாவது பெரிய நகரான இஸ்தான்புல்லிலும், அண்டையிலுள்ள கொகேலி மாகாணத்திலும் ராணுவச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது. ராணுவச் சட்டம் ஒரு மாதம் அமுலில் இருக்கும் என வானொலியில் அறிவிக்கப்பட்ட அரசாங்கப் பிரகடனம் கூறியது. (ய)

### ஏழைகளின் வெற்றி

இறங்கலை, ஜூன், 17

முதலாளித்துவ ஆட்சியான தேசிய அரசை பெரும் தோல்வி அடையச் செய்து ஐக்கிய முன்னணி வென்றது. ஐக்கிய முன்னணியினரின் வெற்றியென்பதிலும், ஏழைகளின் வெற்றி என்று கூறுவது பொருந்தும்.

இவ்வாறு தெல்தெனிய நாடாளுமன்றத் தொகுதியின் புதிய அங்கத்தவரான திரு. ராஜா குலதிலக்காவுக்கு இறங்கலையை அடுத்துள்ள அம்மம்பிட்டிய என்னும் இடத்தில் பொது மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் பேசும் போது திரு. ராஜா குலதிலக்க கூறினார். (கு-243)

### கொள்ளையடித்த வழக்கில் எதிரி விடுதலையானார்

திருகோணமலை, ஜூன், 17

கொள்ளையடித்த வழக்கு ஒன்றில் சாட்சியங்கள் திருப்திகரமாக இல்லாத காரணத்தால் எதிரியை திருகோணமலை நீதவான் திரு. டி. சி. டபிள்யூ. விக்ரமசேகரா விடுதலை செய்து தீர்ப்பு அளித்தார்

கிளிவெட்டியிலுள்ள தேநீர்க் கடையொன்றினுள் புகுந்து 360 ரூபா பணத்தைக் கொள்ளை அடித்ததாக எஸ். ஏகாம்பரம் என்பவர் மீது மூதூர்ப் பொலீஸார் தொடர்ந்த வழக்கு அண்மையில் திருமலை நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

சம்பந்தப்பட்ட கடையின் காஷியரான நல்லதம்பி ஞானசுப்பிரமணியம் சாட்சியம் அளிக்கையில், "சம்பவ தினம் நான் கடையில் பட்டறையில் இருந்தேன். அப்பொழுது மேசை லாச்சியினுள் 360 ரூபா பணம் ஒரு கடித உறையினுள் வைக்கப்பட்டு இருந்தது. அப்பொழுது எதிரி உள்ளே வந்து என்னைப் பிடித்து தள்ளி விட்டு அப்பணத்தை எடுத்துச் சென்றார். பணம் இருந்த என்வலப்பை எதிரி எடுத்துச் சென்றதை நான் லாம்பு வெளிச்சத்தில் கண்டேன்" —என்றார்.

கிளிவெட்டி உப தபாற் கந்தோர் அதிபர் திரு. வைரமுத்து சுந்தரலிங்கம் சாட்சியம் அளிக்கையில், "சம்பவ தினம் நான் முறைப்பாட்டுக்காரரின் தேநீர்க் கடைக்கு தேநீர் அருந்தச் சென்றேன். அப்பொழுது எதிரி அங்கு முறைப்பாட்டுக்காரரை ஒரு பக்கம் தள்ளி விட்டு, மேசை லாச்சியினுள் இருந்த பணத்தை எடுத்துச் சென்றார். எதிரி முதலில் என்வலப்பை எடுத்தார். பின்னர் எதிரியின் கைகளில் பத்து ரூபா நோட்டு இருப்பதைக் கண்டேன்" என்றார்.

இக்கட்டத்தில் சாட்சியின் முரண்பாடு காரணமாக எதிரியை விடுதலை செய்வதாக நீதவான் தீர்ப்பு அளித்தார். (கு-287,

### இ. போ. ச. கண்டக்டர் கொலை: இரும்புக் கம்பி கண்டுபிடிப்பு

இ. போ. ச. கண்டக்டர் துரைராசாவின் கொலை சம்பந்தமாக புலன் விசாரணையில் ஈடுபட்ட வவுனியா பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி காலியோடயஸ் மேற்படி கொலைக்கு பாவிக்கப்பட்டதெனக் கருதப்படும் மூன்றடி நீளமான இரும்புக் கம்பி ஒன்றை கைப்பற்றினார்.

சந்தேக நபர்களில் ஒருவரே இந்தக் கம்பியை காட்டுக்குள்ளிருந்து தேடி எடுத்துக் கொடுத்தார். மோட்டார் வாகனத்தின் சக்கரத்தை உயர்த்துவதற்கு (ஜாக்) பயன்படும் உபகரணத்தின் ஒரு பகுதியே இந்தக் கம்பியாகும்.

பருத்தித்துறை வாசியும், முல்லைத்தீவு பஸ் டிப்போவில் வேலை செய்தவருமான துரைராஜா இரவு வேளையில் குமுழமுனை என்ற இடத்தில் வண்டிக்குள் தங்கியிருந்த சமயம் கொல்லப்பட்ட இச்சம்பவத்தையொட்டி ஏற்கனவே கைது செய்யப்பட்ட இரு நபர்களும் வவுனியா நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை இம்மாதம் 20-ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது. (கு-220)

### பலாத்கார வழக்கில் எதிரி குற்றத்தை ஏற்றுக்கொண்டார்

திருகோணமலை, ஜூன், 17

நள்ளிரவு நேரத்தில் வீடு புகுந்து திருமணமான இளம் பெண்ணின் மீது பலாத்காரம் பிரயோகிக்க முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

பொலீஸார் தரப்பின்படி, சம்பவ தினம் நள்ளிரவு 12 மணி போல் எதிரி முறைப்பாட்டுக்காரப் பெண்ணின் வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்தாராம்.


பின்னர் அங்கு தனது கணவன் அருகே ஆழ்ந்த நித்திரையில் இருந்த பெண்ணின் மறு அருகே படுத்தபடி அப்பெண்ணின் முகத்தைத் தன் கைகளால் வருடினாராம்.

யாரோ தனது முகத்தைத் தடவுவதை உணர்ந்த பெண் விழித்து எழுந்து பார்த்த பொழுது எதிரியைக் கண்டு கூச்சலிட்டாராம். கணவனும் விழித்து எழவே எதிரி பாய்ந்து ஓடினாராம். பின்னர் எதிரியைப் பிடித்துக் கொண்டார், கணவன்

இவ்வழக்கு திருகோணமலை நீதவான் திரு. டி. சி. டபிள்யூ. விக்ரமசேகரா முன்னிலையில் அண்மையில் விசாரணைக்கு வந்தது.

அப்பொழுது எதிரியான ஷேக் அப்துல்லா என்பவர் குற்றவாளி என்று ஒப்புக் கொள்ளவே, நீதவான் எதிரிக்குத் தண்டனை விதிப்பதை இம்மாதம் 24-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (கு-287)

### குறும்புக்காரச் சுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் முதன் முதல
# தயாரித்த எண்பத்தாறு எ

# தமிழ் மக்கள் மறந்த
# திரு. நட

சென்னை அய்யனாவரத்தில் ஒரு ஒதுக்குப்புறமான இடம். எங்கள் கார் ஒரு தெருவில் நுழைந்து ஒரு சிறிய வீட்டின் முன் நின்றது. அந்த சிறிய வீட்டிற்குள் நுழைந்தோம்.

முன் அறையில், புத்தகங்கள், பத்திரிகைகள் இரண்டு ஜதை கண்ணாடிகள் ஆகியவை நிறைந்த ஒரு பழைய மேஜை. அதன் முன் போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியின் மீது அமர்ந்து ஒருவர் ஏதோ படித்துக் கொண்டிருந்தார்.

அவருக்கு அருகாமையில் கள்ளிப்பெட்டிகள் நிறைய பழைய பேப்பர்கள், கடிதங்கள், ஒரு சாய்வு நாற்காலி இருந்தன.

அந்த அறையின் தோற்றம், வசதிகள் இல்லாத ஒரு எளிய இடமாகக் காட்சி அளித்தது. அவரைப் பார்த்து கை கூப்பி "வணக்கம்" என்றோம். உடனே அந்த முதிய உருவம் ஒரு கிழிந்த சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு "வாருங்கள்" என்று எங்களை வாயார வரவேற்று பக்கத்தில் இருந்த பெஞ்சியில் அமரச் செய்தார்.

நீங்கள் யார் என்று எங்களை விசாரித்தார். நாங்கள் பத்திரிகை காரியாலயத்தில் இருந்து வந்திருக்கிறோம் என்றோம்.

அவருக்கு காது கேட்கவில்லை. எனக்கு காது கேட்கவில்லை. எழுதிக் காட்டுங்கள் என்று அவர் சொன்னார். நாங்கள் எழுத்தின் மூலம் எங்களை அறிமுகம் செய்து கொண்டோம். யாரைப் பார்க்க வந்திருக்கிறீர்கள் என்று கேட்டார்.

"திரைப்படம் தயாரித்த முதல் தமிழர் திரு. நடராஜ முதலியாரைச் சந்திக்க வந்திருக்கிறோம்" என்று எழுதிக் காட்டினோம். அவர் நான்தான் அந்த நடராஜ முதலியார் என்று தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தபடி கூறினார். நாங்கள் திகைத்து விட்டோம். இத்தனை ஆண்டு காலங்களாக தமிழ்த் திரைப்பட உலகம் இவரைத் தெரிந்து கொள்ளாமலும், இவரைப் பற்றி அறிந்து கொள்ளாமலும் இந்த மேதையை அடியோடு மறந்து விட்டதே என்பதை நினைத்து நாங்கள் வெட்கப்பட்டோம். அவரைப் பேட்டி காண வந்தோம் என்பதைத் தெரிவிக்க, நீங்கள் பேட்டி காண்பது பிறகு இருக்கட்டும். முதலில் காப்பி சாப்பிட்டு விட்டு பேசுங்கள் என்று சொல்லி, காப்பி வரவழைத்து எங்களுக்குக் கொடுத்தார். காப்பியை முழுதும் சாப்பிட்ட பின் அவரே பேசினார்.

நான் மக்களாலும், திரைப்படத் துறையினராலும் மறக்கப்பட்ட ஒரு சாதாரண மனிதன். இன்றைய நாகரிக முன்னேற்றத்தில் என்னைவிட திறமைசாலிகளும் மேதைகளும் இருக்கும் போது என்னைப் பேட்டி காண என்ன அவசியம் வந்து விட்டது என்று கம்பீரமாக ஆங்கிலத்தில் கேட்டார். எங்கள் மனம் நெகிழ்ந்து விட்டது.

அவர் எங்களுடன் முழுக்க முழுக்க தரமான ஆங்கிலத்தில் சரளமாகப் பேசினார்.

"என்னைப் பேட்டி காண வந்தது குறித்து மிக்க மகிழ்ச்சி. இதனால் உங்களுக்கோ மற்றவர்களுக்கோ என்ன நன்மை ஏற்படப் போகிறது என்பது எனக்குப் புரியவில்லை. நீங்களும் ஆசையுடன் வந்திருக்கிறீர்கள். நானும் உங்களை ஏமாற்ற விரும்பவில்லை.

86 வயதுடைய அவர் கணீரென்ற குரலில் தன் கலையுலக வாழ்க்கையில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைச சொன்ன போது, ஒரு சரித்திரப் புத்தகத்தைப் படித்த உணர்ச்சியே எங்களுக்கு ஏற்பட்டது.

கே: நீங்கள் தாதா சாகேப் பால்கேயை சந்தித்திருக்கிறீர்களா?

ப: இல்லை. நான் அவரைப் பற்றி நிறைய கேள்விப்பட்டு இருக்கிறேன். அவரிடம் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. ஹிந்துஸ்தான் பிலிம் கம்பெனி பங்குதாரர்களில் ஒருவரான ஆப்தே என்னிடம் பால்கேயைப் பற்றி நிறையச் சொல்லி இருக்கிறார். பால்கே எதைச் செய்தாலும் மிகவும் திறமையாகச் செய்தாராம்.

## கீசகவதம்

சில சமயங்களில் பால்கே ஒரே கோணத்தை சுமார் 50 தடவைக்கு மேல் எடுத்து, பிறகு அதில் இருந்து தனக்குத் திருப்தியான ஒன்றே ஒன்றை தேர்ந்து எடுத்துக் கொள்வாராம்.

கே: நீங்கள் எந்த வருடம் முதன் முதலில் திரைப்படம் தயாரித்தீர்கள்?

ப: 1916-ம் ஆண்டு 35 நாட்களில் ஒரு படத்தை தயாரித்து முடித்தேன். அப் படத்தின் பெயர் "கீசகவதம்."

நான் ஒரு படத்தை தயாரிப்பதற்கு முன், அந்தப் படத்தின் கதையை விளக்கமாக படித்து புரிந்து கொண்டுதான் படத்தை தயாரிப்பேன்.

கே: திரைப்படம் தயாரிக்க வேண்டுமென்ற ஆசை உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

## மோட்டார் கம்பெனி

ப: நான் முதலில் சென்னை மௌண்ட் ரோட்டில் மோட்டார் கார் வியாபாரம் செய்து கொண்டு இருந்தேன். பிறகு அதை சிம்சனுக்கு விற்று விட்டேன்.

கே: (ஆச்சரியத்தோடு) இப்பொழுது இருக்கிறதே சிம்சன்...

ப: அதேதான். அந்த சிம்சனுக்குத்தான் நான் என் கம்பெனியை விற்றேன்.

## கர்ஸன் பிரபு

பிறகு மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்தேன். எனக்கு ஏற்கனவே கலைகளை ரசிக்கக்கூடிய மனப்பக்குவமும், கலைகளை விமர்சிக்கக் கூடிய ஆற்றலும் இருந்தது. அதே சமயம் எனக்கு சினிமா ஒளிப்பதிவுத் துறையின் மீது மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது.

ஸ்டுடிபேக்கர் மோட்டார் கம்பெனியில் மனேஜராயிருந்த ஒரு ஆங்கிலேயர் என்னை, கர்ஸன் பிரபுவின் தர்பாரில் ஒளிப்பதிவாளராக இருந்த ஸ்மித் என்பவரிடம் அறிமுகம் செய்து வைத்தார்.

பூனாவில் ஸ்மித்தை நான் சந்தித்தேன். ஸ்மித் என் ஆர்வத்தைப் பாராட்டி, தன்னிடம் உள்ள புகைப்படச் சாதனங்களையும், ஒளிப்பதிவுச் சாதனங்களையும் என்னிடம் காட்டினார்.

அன்றே காமிராவை எப்படி கையாள்வது என்பதையும் எனக்குச் சொல்லித் தந்தார்.

அந்தக் காலத்தில் காமிராவை ஒரு குறிப்பிட்ட வேகத்தில் கையால் சுற்றித்தான் படம் எடுத்தார்கள்.

ஸ்மித் கையாலேயே காமிராவைச் சுற்றி ஒரு காட்சியை எடுக்கச் சொன்னார். நானும் தாறுமாறாக ஏதோ ஒரு காட்சியை படமாக்கினேன்.

## இருட்டறை

நான் எடுத்த காட்சியை சில நாட்களில் ஸ்மித் தன் வீட்டு இருட்டறையிலேயே கழுவி ஒரு பிரதி எடுத்தார்.

என்னை தன் மாளிகைக்கு விருந்து சாப்பிட அழைத்து, விருந்து முடிநத பின் நான் படமாக்கிய அக் காட்சியை நான், ஸ்மித், அவர் மனைவி மூவரும் போட்டு பார்த்தோம். ஸ்மித்தும் அவர் மனைவியும் அக் காட்சியை திரையில் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

காரணம், அக் காட்சி தெளிவாக இல்லாமல் போனதோடு, சில சமயம் வேகமாகவும், சில சமயம் மெதுவாகவும் ஒரே கோமாளித்தனமாகவும் இருந்தது.

ஆனால் ஸ்மித் என்னை உற்சாகப்படுத்தி சுற்றும் வேகத்தை எப்படிக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதை சொல்லித் தந்தார். சில நாட்களில் காமிராவை கையாளும் முறையை சரிவரக் கற்றுக் கொண்டேன்.

## லண்டனுக்கு தந்தி

பிறகு திரைப்படம் எடுக்கத் தேவையான கருவிகளை விலைக்கு வாங்கினேன். அந்தக் காலத்தில் சினிமாப் படம் எடுப்பதற்குத் தேவையான கச்சா பிலிம் லண்டனில் இருந்துதான் வர வேண்டி இருந்தது. பம்பாய் கொடாக் கம்பெனியில் ஒரு நல்ல பதவியில் இருந்த கார்பென்டர் என்பவர்தான் அடிக்கடி லண்டனுக்குத் தந்தி கொடுத்து எனக்குத் தேவையான கச்சா பிலிமை வரவழைத்துத் தருவார்.

நான் சென்னை திரும்பிய உடனே கீழ்ப்பாக்கம் மில்லர்ஸ் ரோட்டில் ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்துக் கொண்டு திரைப்படம் தயாரிக்க ஆரம்பித்தேன்.

எனக்கு உதவியாக ஜகன்னாதாச்சாரி என்பவரையும், போட்டோ படத்தை முறையோடு கழுவத் தெரிந்த நாராயணஸ்வாமி ஆசாரி என்பவரையும் சேர்த்துக் கொண்டேன்.

என் படங்களுக்கு நான்தான் தயாரிப்பாளன், டைரக்டர், ஒளிப்பதிவாளன் எல்லாம். அந்தக் காலத்தில் குளிர்சாதன வசதி கிடையாது.

## முறைப்படி பயிற்சி

ஆகவே, நான் பெங்களூரில் ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, அந்த பங்களாவிலேயே ஒரு "லேபரட்டரி"யையும் ஏற்படுத்தி, அதை கவனிக்கும் பொறுப்பை நாராயணசாமி ஆசாரியிடம் ஒப்படைத்தேன். படமாக்க உபயோகித்த பிலிம் சுருளை தினமும் கழுவுவதற்காக பெங்களூருக்கு அனுப்புவேன். எல்லாம் சரிவர நடக்கிறதா என்று மேற்பார்வை பார்க்க நானும் சனி, ஞாயிற்றுக் கிழ

களில் ...
சென்று வருவே...

நடிகர்களுக்கு...
படி பயிற்சி அ...
வடிவேலு என்ற...
வினரை என்மே...
துக் கொண்டே...

எம். கே. ...
தந்தை கந்தசா...
யார்கூட, பட...
பதற்குச் ச...
கேட்டு என்னிட...
திருக்கிறார்.

கேள்வி: நீ...
படி நடிகர்களை...
தெடுப்பீர்கள்?

பதில்: நா...
நடிக்கும் ந...
தான் நான் எ...
படத்தில் நடிக்...
தெடுத்தேன்.

அந்தக் ...
பெண்கள் சி...
நடிக்க முன்வ...
விலைமாதர்கூட...
வில் நடிப்பதை...
வமாக கருதின...

என்னுடைய ...
பதி வஸ்திரா...
படத்தில் திரெ...
நடிப்பதற்கு ...
கிலேய பெண்...
தான் நான் ...
தெடுக்க வே...
தது.

அந்த ஆங்கில...
மணிக்கு காட்சி...
கிலத்தில் விளக்...
ரயில்வேயில் ...
இருந்த ரங்கசா...
என்பவரை நான்...
திருந்தேன். ...
சாதனன் வேட...
தப் படத்தில் ...
இருக்கிறார்.

## இந்திய...
## முழுவ...

கேள்வி: நீங்க...
தம் எத்தனை ...
தயாரித்திருக்கிற...

பதில்: திரௌ...
திராபரணம், கீ...
லவகுசா, ருக்ம...
பாமா, மார்கண்...
காளிங்க மர்தன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...லாகத் திரைப் படம்
# ...வயது மாமேதை


... பெங்களூர்
...ருவேன்-
...க்கு முறைப்
... அளிக்க ரங்க
...ன்ற என் உற
...னேடு வைத்
...டேன்.

... ராதாவின்
...சாமி முதலி
...டத்தில் நடிப்
... சந்தர்ப்பம்
...னிடம் வந்

... நீங்கள் எப்
...ளைத் தேர்ந்
...ள்?

... நாடகத்தில்
... நடிகர்களைத்
... என் திரைப்
...டிக்கத் தேர்ந்

... காலத்தில்
... சினிமாவில்
...வருவதில்லை.
...கூட சினிமா
...தை அகௌர
...ஞர்கள்.
...ய "திரௌ
...ராபரணம்"
...ரௌபதியாக



# ...துள்ள

# ...ராஜ முதலியார்

... ஒரு ஆங்
...ண்மணியைத்
... தேர்ந்
...வண்டியிருந்

...கிலப் பெண்
...சிகளை ஆங்
...க்கிக் கூற
... வேலையாய்
...சாமிபிள்ளை
...ான் நியமித்
... அவர் துச்
...டத்தில் அந்
... நடித்தும்

## ...டியா
## ...வதும்

...ங்கள் மொத்
... படங்கள்
...கிறீர்கள்?
...ளபதி வஸ்
... கீசகவதம்,
...மணி சத்ய
...கண்டேயா,
...னம் ஆகிய

ஆறு படங்களைத் தயாரித்திருக்கிறேன்.

என்னுடைய படங்களின் வடநாட்டு விநியோக உரிமையை கல்கத்தாவில் இருந்த மதன் என்பவருக்கும், பம்பாய் விநியோக உரிமையை ஆதிர்ஷ்ட ஈரானி என்பவருக்கும் விற்று விட்டேன். என்னுடைய படங்கள் இந்தியா முழுவதும் திரையிடப்படுகின்றன.

கேள்வி: நீங்கள் தயாரித்த படங்களில் நீங்கள் விரும்பிய படம் எது?

பதில்: திரௌபதி வஸ்திராபரணம்தான் நான் விரும்பிய படம். இன்றைக்கும் கலை நுணுக்கத்திலே அதுதான் சிறந்த படம் என்று நான் உறுதியாகச் சொல்வேன்.

## விலகியது ஏன்?

கேள்வி: நீங்கள் ஏன் திரைப்படத் துறையில் இருந்து விலகினீர்கள்? ஏதேனும் முக்கிய காரணம் உண்டா?

பதில்: அது ஒரு பெரிய கதை, சொல்கிறேன். இந்தக் காலத்தில் ஒருவர் படம் தயாரிக்க விரும்பினுல் அவருக்கு பல பணக்காரர்கள் வட்டிக்குப் பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

விநியோகஸ்தர் களும் முன்பணம் கொடுத்து தயாரிப்பாளருக்குப் படமெடுக்க உதவி செய்கிறார்கள். சர்க்காரும் முடிந்த அளவிற்கு கடன் உதவி செய்கிறார்கள். நான் படம் தயாரித்த அந்தக் காலத்தில் தயாரிப்புச் செலவு முழுவதும் நானே ஏற்க வேண்டி இருந்தது.

இந்த நிலையில் நாட்டிலே மகாத்மா காந்தி அடிகளின் தலைமையின் கீழ் சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாம் நகரில் நெய்த துணிகளை வெகுவாக இறக்குமதி செய்து, இந்தியர்களிடையே தங்களுடைய துணி வியாபாரத்தைப் பெருக்க முயன்று கொண்டிருந்தனர்.

அந்நிய நாட்டுத் துணிகளை அறவே பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்று மகாத்மா குரல் கொடுத்தார். இதைப் பற்றி நான் சிந்தித்தேன்.

## உதவி செய்ய தயக்கம்

மகாத்மாவின் கோரிக்கையை மக்களிடையே பிரசாரம் செய்ய சினிமாவை ஏன் ஒரு முக்கியமான சாதனமாக உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாது என்று நான் நினைத்தேன்-

அந்நிய நாட்டுத் துணி பகிஷ்காரத்தைப் பற்றி ஒரு சிறு துண்டுப் படமாக எடுத்து இந்தியாவில் உள்ள பலநூறு தியேட்டர்களிலும் ஒரே சமயத்தில் மக்களுக்குக் காட்டலாம் என்று நான் முடிவு செய்தேன். அதற்கு வேண்டிய பணம் என்னிடம் இல்லை.

பம்பாய் மில் அதிபர்களின் சங்கத்தில் முக்கியஸ்தர்களாக இருந்த மோடி, மெலோனி என்ற இருவரையும் சந்தித்து என் திட்டத்தை விளக்கி பண உதவி செய்யும்படி கேட்டேன். என் திட்டத்தை அவர்கள் வெகுவாகப் புகழ்ந்தார்களே அன்றி, பண உதவி செய்வதில் தயக்கம் காட்டினார்கள்.

மக்களிடையே தாய் நாட்டுப் பற்றையும், அந்நிய துணி பகிஷ்காரத்தையும் சினிமா மூலம் பிரசாரம் செய்ய நான் திட்டமிட்டிருந்ததை, மிஸ்டர் ஸ்டோன் என்ற ஆங்கிலேயர் என்னை மிகவும் பாராட்டினார். அவரிடமே என் முயற்சிக்கு வேண்டிய மூலதனத்தை அளிக்குமாறு கேட்டேன்.

"நீங்கள் செய்யும் பணி என் நாட்டிற்கு விரோதமாக இருக்கிறது. ஆகவே இதற்குப் பண உதவி செய்ய முடியாமைக்கு வருந்துகிறேன்" என்று சொல்லி விட்டார். எனக்குத் தேவையான பணம் கிடைப்பதற்கு பல பேரிடம், பல வழிகளில் முயற்சித்தேன்.

என் முயற்சிகள் அவ்வளவும் தோல்வியடைந்தன. ஆகவே நான் தொழில் மீது வெறுப்புற்று 1923-ம் வருடம் திரைப்படத் தொழிலில் இருந்து முழுமையாக விலகி விட்டேன்.

என் நாட்டிற்கும் என் நாட்டு மக்களுக்கும் உபயோகப்படாத தொழில் எனக்கு எதற்கு?

(இப்படி அவர் சொல்லி முடிந்ததும் நான் உணர்ச்சி வசப்பட்டேன். நாட்டுப் பற்றுக் கொண்ட அந்தப் பெரியவரை நான் மானசீகமாக வணங்கினேன்.)

## இளம் சந்ததிகள்

கே: தற்கால திரையுலகைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?

ப: பத்திரிகைகளில் படித்து கொஞ்சம் தெரிந்து கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான்-

கே: சமீபத்தில் நீங்கள் ஏதாவது திரைப்படம் பார்த்தீர்களா?

ப: சுமார் 20 வருடங்களாக நான் எந்தத் திரைப்படமும் பார்க்கவில்லை.

கே: இன்றைய திரைப் படங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப: முதலில் திரைப் படங்களில் கவர்ச்சியைக் காட்டி மக்களிடம் பணம் வசூலிப்பதை நான் அறவே வெறுக்கிறேன். அதனுல் இளம் சந்ததிகளின் கலாசாரம், பண்பு இவை பறிபோகிறது என்பது என் எண்ணம்-

காதல் காட்சிகள்கூட கௌரவமான முறையில், தூய்மையோடு படமாக்கப்பட வேண்டும். நல்லவைகளையும், தீயவைகளையும் மக்களிடையே பரப்ப சினிமா ஒரு முக்கிய சாதனமாகப் பயன்படுகிறது. ஆகவே தயாரிப்பாளர்களும் டைரக்டர்களும் மக்களின் பண்புள்ள எதிர்கால வாழ்க்கைக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் பாடுபடக்கூடிய சாதனமாக இந்தத் துறையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்-

## குறிக்கோள்

தேசத் துரோகச் செயல்களையும், இனக் கலவரங்களையும், சமூக விரோதிகளின் தீ வைப்பு அட்டூழியங்களையும் அறவே ஒழித்து, மக்களிடையே அமைதியை நிலைநாட்ட சினிமாவைத் தவிர வேறு சாதனமே கிடையாது என்பது என் அபிப்பிராயம்.

ஒரு குறிக்கோளோடு திரைப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது என் தாழ்மையான எண்ணம்.

கே: நீங்கள் மேல்நாட்டுத் திரைப்படங்கள் பார்த்ததுண்டா?

ப: பார்த்ததுண்டு. அப்படங்களில் கொலை, கொள்ளை, இனக்கவர்ச்சி முதலியவை அதிகமாக இருக்கக் கண்டேன். அக்காலத்தில் புகழ் வாய்ந்த தயாரிப்பாளராக இருந்த செஸில் பி [illegible]மிலிக்கு இது பற்றி க[illegible]ட எழுதினேன்.

அவர் எழுதிய பதிலில், "உங்களுடைய நியாயமான குறைகளை நான் புரிந்து கொண்டேன்.

## உயர்ந்த நோக்கம்

"மனித சமுதாயத்தின் பண்பாடும் கலாசாரமும் கெட்டுவிடக் கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தில் நீங்கள் எனக்கு எழுதியிருப்பதற்கு நன்றி. ஆனுல் இப்படிப்பட்ட படங்களைத் தடுத்து நிறுத்தும் சக்தி என்னிடம் மட்டும் இல்லை.

"பணம் சம்பாதிப்பதையே நோக்கமாகக் கொண்ட தயாரிப்பாளர்களுக்கு உங்கள் புத்திமதி செவியில் ஏறுது என்றே நினைக்கிறேன்" என்று எழுதியிருந்தார்.

கே: இதுவரைக்கும் நீங்கள் சினிமாவைப்பற்றி எங்களுக்கு பதில் அளித்ததற்கும், அறிவுரை கூறியதற்கும் நன்றி. உங்களை அதிகமாகத் தொந்தரவு செய்ய நான் விரும்பவில்லை.

கடைசியாக ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்டு எங்கள் பேட்டியை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். தற்சமயம் நீங்கள் எப்படி பொழுது போக்குகிறீர்கள்?

ப: எனக்கு இப்போது வயது 86 ஆகிறது. நான் அதிகாலையில் எழுந்து விடுகிறேன்- குளித்து முடிந்தவுடன் பகவத் கீதையையும், மகா பாரதத்தையும் படித்து முடிக்கிறேன்.

பிறகு வெளிநாட்டுப் பத்திரிகைகளையும் நிறையப் படிக்கிறேன். இந்திய விஞ்ஞானப் பத்திரிகைகளையும் விரும்பிப் படிக்கிறேன். ஏனென்றுல் நான் ஒரு விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருக்கிறேன்.

## ஆராய்ச்சி

கே: என்ன ஆராய்ச்சி என்று நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?

ப: அதில் வெற்றி அடைந்த பிறகு நான் உங்களுக்கு சொல்கிறேன் என்று சிரித்துக் கொண்டே கூறினுர்.

நாங்கள் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்படும்போது அவர் சொன்னது இதுதான்:—

"இத்தனை காலமாக என்னைப்பற்றி யாரும் தெரிந்துகொள்ள முயற்சிக்கவில்லை. என்னை

(6-ம் பக்கம் பார்க்க)

### அதிகாரியிடம் பெற்ருேர் முறையீடு

# மேசையில் மை ஊற்றி நக்கச் சொன்ருராம்

## மாணவியைத் தண்டிக்க ஆசிரியர் கையாண்ட புதுமையான முறை

பாடசாலை மேசையில் ஊற்றிய மையை நாக்கால் நக்கிச் சுத்தப்படுத்தும்படி கூறி ஒரு மாணவி தண்டிக்கப்பட்டாள். கனிஷ்ட பாடசாலை ஆசிரியர் ஒருவர் இரு கிழமைக்குள் மேற்கொண்ட கடும் நடவடிக்கைகளில் மேற்கண்ட சம்பவமும் ஒன்ருகும்.

இவை பற்றி பெற்ருேரிடம் விசாரித்த அதிகாரி சமர்ப்பித்த அறிக்கையில் மேலும் பல சம்பவங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

காது கேளாத ஒரு மாணவியை ஆசிரியர் காதுகளிலும், முகத்திலும் அடித்துள்ளார். இன்னொரு மாணவி தலையிலும், முகத்திலும் அடிக்கப்பட்டுள்ளார்.

ஒரு மாணவியின் தலையில் பிளாஸ்டிக் பையை மாட்டியும், ஒரு மாணவரின் கழுத்தில் ரப்பர் வளையம் மாட்டியும் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

லண்டன் நேப்பியர் வீதியிலுள்ள கனிஷ்ட பாடசாலையிலேயே இப்படி நடந்துள்ளது. இங்கு படிக்கும் மாணவரின் வயது ஏழுக்கும் பதினென்றுக்கும் இடைப்பட்டதாகும்.

நியூஹாம் கல்வி அதிகாரியான திரு. ரொனல்ட் ஒபன்சோ இது பற்றிக் கூறுகையில், "ஆசிரியருக்கு எதிரான புகார்கள் உண்மையானதென கண்டு பிடிக்கப்பட்டது. தலைமையாசிரியர் இத்தண்டனைகளை உண்மையென்று ஒப்புக் கொண்டார். நான் திகைத்துப் போனேன்" என்று கூறினர்.

தற்காலிகமாக நியமிக்கப்பட்ட அந்த ஆசிரியர் உடனடியாக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

அந்த அறிக்கையில் ஆறு சம்பவங்கள் பற்றி குறிப்பிடப்பட்டாலும், அதை விட மேலும் மூன்று சம்பவங்கள் தனக்கு அறிவிக்கப்பட்டதாக அக்கல்வி அதிகாரி கூறினர்.

ஒரு மாணவரின் கையில் கொம்பஸால் குத்தப்பட்டது; இன்னொருவரின் கை விரல்கள் மேசை மூடியால் நசுக்கப்பட்டன; மற்றொருவர் கிரிக்கட் தடியால் தாக்கப்பட்டார்.

பாடசாலையின் தலைமை ஆசிரியர் பெற்ருேரிடம் இச்சம்பவங்களையிட்டு மன்னிப்புக் கோரினர்.

"இளஞ் சிருர்களுக்கு இது ஒரு மிகப் பயங்கரமான நிகழ்ச்சி" என அக்கல்வி அதிகாரி கடைசியாகக் குறிப்பிட்டு உள்ளார். (க-15)

## வழிமறிப்பை தடுக்க

மொரண்ட்ரீல், ஜூன். 17

நடுவானில் விமானங்களை வழி மறித்துத் திசை திருப்பும் நடவடிக்கைகளைத் தடுப்பது பற்றி இங்கு கூடிய சர்வதேச விமானக் கம்பெனிகளின் விசேஷ மகாநாடு ஆராய்கிறது.

## 'மகாவலி அபிவிருத்தி அமைப்பு முறை மாறினல் மிச்சம் கிட்டும்'

கொழும்பு, ஜூன், 18

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் முதலாவது கட்டத்தில் உள்ள பொல்கலை சுரங்க வேலைகளின் நிர்மாண அமைப்பு முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தினல் 370 லட்சம் ரூபாவை மிச்சம் பிடிக்க முடியும்.

இவ்வாறு மகாவலி அபிவிருத்தித் திட்டம் பற்றி ஆராய்வதற்காக நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவால் நியமிக்கப்பட்ட கமிட்டியின் தலைவரான தபால் தந்தித் துறை அமைச்சர் செனட்டர் செல்லையா குமாரசூரியர் "தந்தி" நிருபரிடம் தெரிவித்தார்.

மகாவலி அபிவிருத்தி பற்றி ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டி இதுவரை தனது வேலையில் சுமார் 60 சத விகிதத்தை செய்து முடித்து விட்டது என்றும் திரு. குமாரசூரியர் தெரிவித்தார்.

இதுவரை நடத்திய ஆராய்வுகளிலிருந்து, மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் பிரதம நிர்மாண, அமைப்பு முறைகளை மாற்ற வேண்டியது அவசியம் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம். எனினும் சகல அமைப்பு முறை நுட்பங்களையும் பூரணமாக ஆராய்ந்த பின்னரே சரியான கருத்தை வெளியிட முடியும் என்று அமைச்சர் நம்புகிருர்.

"அவசியம் ஏற்படின் மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டம் பற்றி உலக வங்கியுடன் எமது அரசு பேச்சு வார்த்தை நடத்தும். எமது நாட்டின் சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் பாதிக்காத வகையில் நிதி உதவி பெற முடியுமானல் அதை ஏற்கத் தயங்க மாட்டோம். உலக வங்கியிலிருந்து நிதி உதவி பெற முடியாது போனல் வேறு வகையில் உதவி பெறுவதற்கும் எமக்குத் தெரியும்" என்று திரு. குமாரசூரியர் மேலும் தெரிவித்தார். (க)

## "உடல் மெலிய நடனம் ஆடுங்கள்"

ஹாம்பர்க் (டாட், ஜூன் 17

"உடல் மெலிய வேண்டுமானல் நடனம் ஆடுங்கள்" ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் இவ்வித இயக்கம் தொடங்கப்பட்டிருக்கிறது. "உடல் நலத்துடன் வாழ உடற் பயிற்சி அவசியம்" என்பதை வலியுறுத்த, ஜெர்மன் விளையாட்டுச் சங்கம் தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகிறது.

ஹாம்பர்க் சுகாதாரத் துறையினருக்கு, ஒரு புதுமையான யோசனை தோன்றியது. "நாற்காலிகளில் அமர்ந்து வேலை செய்கிறவர்களே, ஓய்வு நேரத்தில் நடனம் ஆடுங்கள். உடல் மெலியும், ஆரோக்கியமாகவும் வாழலாம்" என்று பிரசாரம் செய்தது. ஹாம்பர்க் நடனச் சங்கத்தில் 400 ஆக இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை, 2500 ஆக அதிகரித்துவிட்டது. ஆங்காங்கு நடனங்களில் தீவிரமாக ஈடுபடுகிறவர்களின் தொகையும் பெருகிவிட்டது.

## மாணவி மீது பலாத்காரம் பிரயோகித்ததாக வழக்கு

திருகோணமலை, ஜூன், 17

பாடசாலை மாணவி மீது பலாத்காரம் பாவித்ததாக ஒரு வாலிபன் மீது கந்தளாய்ப் பொலீஸார் திருகோணமலை நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து உள்ளனர்.

அண்மையில் இவ்வழக்கு திருகோணமலை நீதவான் திரு. டி. சி. டபிள்யூ. விக்ரமசேகரா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

புரோசிகியூஷன் தரப்புப்படி, சம்பவம் நடந்த தினம், பிஸோ மெனிக்கா என்ற இந்த பருவ மாணவி வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாளாம்.

அப்பொழுது எதிரியான தாஜுடீன் என்ற முஸ்லிம் இளைஞன், மாணவியின் கைகளைப் பிடித்து இழுத்து பலாத்காரம் செய்ய எத்தனித்தாராம்.

எதிரி குற்றவாளியல்ல என்று சொன்னதைத் தொடர்ந்து மேல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (க-287)


## எல்லா வீடுகளுக்கும் ஒரு வைத்தியர்!


உங்களுக்கு எந்தவிதமான ஒரு நோய் ஏற்பட்டாலும் ஒரு தடவை **சித்தாலேப்ப** வை பாவித்துப் பாருங்கள்.

உங்கள் வலியுள்ள இடத்தையடைந்து அதை குணப்படுத்தும். இதை தடவுவதால் உடலின் உள்ளேயும், மேலிலும் ஒரே விதமாக குணம் கிடைக்கும். பாவிக்கும் முறைகள் பெட்டிக்குள் இருக்கின்றது.

ஒரு பெட்டியின் விலை ரூ. 2–50
ஒரு சிறிய சீசாவின் விலை ரூ. 1–00

குண்டிக்காய் ரோக நிபுணரான மஹந்திரிக்கு சில்வா ஹெட்டிகொட அவர்களால் தயாரிக்கப்பட்ட

**சித்தாலேப்ப**



விநியோகஸ்தர்கள்:-

**பேர்ஸி டிரேடிங் கொம்பனி**

185, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு—11.


## தமிழ் மக்கள்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மதித்து, என்னை வந்து பேட்டி கண்டதற்கு உங்களுக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும். நல்ல காலம், இந்த வருடமே நீங்கள் என்னைச் சந்தித்து விட்டீர்கள். அடுத்த வருடம் நான் இருப்பேனே, மாட்டேனே" என்று உணர்ச்சி வசப்பட்டு சொன்னபோது, எங்கள் கண்களில் கண்ணீர் துளிர்த்தது-

"நீங்கள் நூருண்டு காலத்திற்கு மேல் வாழத்தான் போகிறீர்கள்" என்று சொல்லி கூப்பிய கரங்களோடு அவரிடம் இருந்து விடை பெற்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை ஆபீஸ் அறையில்

# மாணவியுடன் அதிபர் உடலுறவு கொண்டார்

### ஜீவனம்சம் கட்டும்படி நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு தெற்கிலுள்ள பாடசாலை அதிபர் ஒருவர், தனது மாணவியுடன் பாடசாலை ஆபீஸ் அறையில், உடலுறவுகள் வைத்ததன் காரணமாக, ஒரு குழந்தைக்குத் தந்தையாகி, கோர்ட்டில் நிற்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

பதினெட்டு வயது யுவதிக்கும், 1969 ஆகஸ்ட் 9-ந் திகதி அவளுக்கும் பிறந்த குழந்தைக்கும், தாபரிப்புப் பணமாக மாதம் நூறு ரூபா கட்டும்படி கொழும்பு தெற்கு நீதவான் திரு. கொலின் மெண்டிஸ் அவருக்கு உத்தரவிட்டு உள்ளார்.

இவ்வழக்கில் இந்த யுவதி தனக்கும் தன் குழந்தைக்கும் பாடசாலை அதிபரிடமிருந்து தாபரிப்புக் கோரியிருந்தார்.

பாடசாலை அதிபராய்க் கடமையாற்றும் காலத்தில் அவர் தனது ஆபீஸ் அறையிலேயே அப்பொழுது மாணவியாயிருந்த இந்த யுவதியுடன் 2-11-66; 5-11-66 திகதிகளிலும் அதற்குப் பின்பும் உடலுறவு கொண்டார் என்றும் கூறப்பட்டது.

இவ்வழக்கு முன்பு விசாரிக்கப்பட்டபொழுது இந்த யுவதி சாட்சியமளித்தார்.

தினந்தோறும் தான் பாடசாலைக்கு முதலாவதாக வருவதென்றும், மற்றும் பிள்ளைகள், ஆசிரியர்கள் வருமுன் எதிரி தன்னை கற்பழித்தார் என்றும் கூறினர்.

எதிரியின் மனைவியும் அப்பாடசாலையில் ஆசிரியையாக இருக்கிறார். இக்குற்றச்சாட்டு வெளியானவுடன் மேற்படி அதிபர் தற்காலிகமாக பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

அதிபர் எப்பொழுதும் தேசிய உடையில் வருபவர் என்றும், ஆனால், தான் அழகிய நிறங்கொண்ட கட்டைப் பாவாடை, சட்டை அணிந்து வருவது வழக்மென்றும் அந்த யுவதி சாட்சியம் அளிக்கையில் கூறினர்.

திரு. எஸ். பீ. டி. வலண்டைனின் ஆதரவுடன் திரு. என். சமரக்கொடி பாடசாலை அதிபரின் சார்பில் வழக்கை நடாத்தினர். திரு. கிளாரன்ஸ் எம். பெர்ணண்டோ மனுதாரரான யுவதியின் சார்பில் ஆஜராகியிருந்தார். (க–15)

### சுற்றுலா பிரயாணிகளுக்கு படுக்கை வசதியுடன் பஸ்

சுற்றுலா பிரயாணிகளுக்கு எல்லாவித வசதிகளும் இருக்க வேண்டுமென்பதற்காக ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் ஒரு சுற்றுலா ஸ்தாபனம், புதுமையான "பஸ்" ஒன்றைத் தயாரிக்க "ஆர்டர்" கொடுத்திருக்கிறது.

ஸ்டட்கார்ட் தொழிற்சாலையில் தயாரான, "ஸ்கைலைனர்" என்ற இரட்டை மாடி பஸ், ஐரோப்பாவிலேயே வலிமைமிக்கது. 340 குதிரைச் சக்தியுள்ள எஞ்சின் பொருத்தப்பட்டது. 12 மீட்டர் நீளமுள்ள இந்த பஸ்ஸில் மொத்தம் 75 பேர் வசதியாக பிரயாணம் செய்யலாம். சாய்வாகப் படுத்துத் தூங்குவதற்கு வசதியான இருக்கைகள் உள்ளன. விமானத்தில் இருப்பதைப் போல பிரயாணிகளின் வசதியைக் கவனிப்பதற்கு, ஒரு பெண் இருப்பார். உணவு தயாரிக்க சமையல் அறையும், காப்பி, மது வழங்க தனித் தனிப் பிரிவுகளும், "பொழுது போக்காக" சீட்டுக் கச்சேரி நடத்த இரு மேஜைகளும் நாற்காலிகளும் உண்டு. ஏன், கக்கூசும்கூட உண்டு.

யூகோஸ்லேவியாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையே இப்பஸ், உல்லாசப் பிரயாணத்திற்குப் பயன்பட இருக்கிறது. இதே ஸ்தாபனத்தினர் உருவாக்கிய "ரோடல்" படுக்கை வசதியுடன் கூடிய சொகுசு பஸ், கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்று வருகிறது.

### பாட்மிண்டன் விளையாடிய பெண் மயங்கி மரணமானார்

பாட்மிண்டன் விளையாடிய பின், மயங்கிய நிலையில், பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 27 வயதான, இரண்டு பிள்ளைகளின் தாய் மரணமானார்.

பதுளை, கட்டுகஹா வளவையைச் சேர்ந்த திருமதி நீனு டீ சில்வா தேனுவரா பாட்மிண்டன் விளையாடிய பின் கடுமையான தலைவலி என முறையிட்டார்.

டாக்டர் கே. எஸ். டி. சில்வா வரவழைக்கப்பட்டு பரிசோதித்த பின், பதுளை ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்தப்பட்டு, அறிவு தெளியாத நிலையிலேயே மரணமானார்.

பதுளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. பி. பி. இரத்நாயக்கா நடாத்திய விசாரணையில், இறந்த பெண்ணின் கணவரான திரு. லயனல் சி. பி. ராஜபக்ஸவும் சாட்சியமளித்தார்.

இயற்கை மரணம் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. (க–15)

### பத்து வயதுச் சிறுமியை கற்பழித்துக் கொலை?

பத்து வயதுச் சிறுமி கற்பழிக்கப்பட்டு, கழுத்துத் திருகி கொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று பள்ளேபொட பொலீஸ் பகுதியில் உள்ள ரம்பென்னுவ என்னும் கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

இப் பரிதாப முடிவுக்குள்ளான சிறுமியின் பெயர் சுமனவதி மயனக்கே என்பதாகும்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில், திரு. கே. ஏ. செனிவரத்ன வால் நடாத்தப்பட்ட விசாரணையின்போது தெரியவந்ததாவது:—

இம் மாதம் 10–ம் திகதி இச் சிறுமியை மூன்று மைல்களுக்கு அப்பாலிருக்கும் கொலம்பகே என்னும் இடத்துக்கு வீட்டுச் சாமான்கள் வாங்கிவர இவரின் தகப்பன் அனுப்பியுள்ளார். தனிப் பாதை ஒன்றால் இச் சிறுமி திரும்பி வரும்போது, யாரோ ஒருவனால் பற்றைக்குள் இழுக்கப்பட்டு கற்பழிக்கப்பட்ட பின் கழுத்தை நெறித்துக் கொல்லப்பட்டுள்ளாள்.

இவ் விசாரணையில் எம். பீ. ஜேமஸ் என்பவர் சாட்சியமளிக்கையில், தான் கமத்தில் இருக்கும் சமயம் 4.30 மணியளவில் ஒரு சிறுமியின் அவலக்குரல் கேட்டதாயும், ஆனால் தான் அதைப் பொருட்படுத்தவில்லை என்றும் கூறினர். ஒரு சிறுமியைக் காணவில்லை என்றவுடன்தான் தனக்கு அச் சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது என்றும் கூறினர்.

இன்னும் எவரும் கைதாகவில்லை. இரத்தினபுரி உதவிப் பொலீஸ் சுப்பிரிண்டன்ட் திரு. எஸ். எஸ். நாதன் புலன்விசாரணை செய்துவருகிறார். (க– 15)

### கட்டழகுக் கன்னித் தனது காதலனுடன் கம்பி நீட்டல்

தெல்தெனிய, ஜூன், 17

கல்யாணமாகாத அக்காள் கல்யாணத்திற்காக காத்திருக்க தங்கையானவள் எடுத்த சம்பளத்தை சுருட்டிக் கொண்டு, பெற்றோரை தவிக்க விட்டு அர்த்த ராத்திரியில் யாருக்கு தெரியாமல் தனது கள்ளக் காதலனுடன் கம்பி நீட்டி விட்டாளாம்.

இச்சம்பவம் இறங்கலை பகுதியைச் சேர்ந்த தோட்டமொன்றில் நடந்துள்ளது. இது பற்றி மேலும் கூறப்படுவதாவது:—

தளதள உடம்பும், அழகு நடையும், ஆசை முகமும், இனிய குரலும் கொண்டு கவர்ச்சிப் பாவையாக காட்சியளித்த கொழுந்து பறிக்கும் அழகுக் கன்னியானவள், அதே தோட்டத்தைச் சேர்ந்த நடையிலும், உடையிலும், உருவத்திலும் கட்டழகை காட்சியளித்த இளம் காளை ஒருவனை உயிருக்குயிராக காதலித்து வந்தாளாம்.

இவர்களின் காதல் விஷயம் இருவரினது பெற்றோருக்கும் தெரிய வரவே மங்கையின் பெற்றோர் மாத்திரம் மங்கையைக் கண்டித்தனராம். இக்கண்டிப்பின் மத்தியில் இவர்களின் காதல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்ததாம்.

இவர்களின் காதல் வளர்ச்சியைக் கண்டு கொதிப்படைந்த மங்கையின் பெற்றோர் மங்கையை மென்மேலும் துன்புறுத்தத் தொடங்கியதும். வீட்டில் இருப்புக் கொள்ள விரும்பாத மங்கையானவள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

தோட்டத்தில் தொழிலாளர்களது சம்பள தினத்தன்று அச் சம்பளத்தையும் வாங்கிக் கொண்டு எப்போதும் போல் தனது பெற்றோரிடம் அப்பணத்தைக் கொடாமல் அர்த்த ராத்திரியில் அத்தனை பேரும் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போது யாருக்கும் தெரியாமல் சம்பளத்தையும் எடுத்துக் கொண்டு தனது உயிர்க் காதலனுடன் ஊரையே விட்டுப் பறந்து சென்று விட்டாள்.

புதல்வியின் செயலைக் கண்டு பெற்றோர் பெரிதும் தவிக்கின்றனர். மங்கையைத் தேடி அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றனர். (க–243)

### திருட்டு

நுகேகொடை, கங்கொடவில ஹைலெவல் ரோட்டில் வசிக்கும் தர்மதாஸ மதூ விதாரண என்பவரின் கடை, 12-6-70 இரவு 8–30 மணியளவில், உடைக்கப்பட்டு 860 ரூபா 50 சதம் பெறுமதியான பொருட்கள், 73 ரூபா 40 சதம் பெறுமதியான சிகரெட் முதலியவை களவாடப்பட்டுள்ளதாக மிரிஹான பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க–15)

### சேகுவேரா இயக்க சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை

சேகுவேரா உறுப்பினர்கள் எனக் கைது செய்யப்பட்ட இருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். ஆகஸ்ட் 8-ம் திகதி மீண்டும் ஆஜராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இரத்மலானையைச் சேர்ந்த வி. கனகரத்தின, பந்துசேன ஆகிய இருவருமே சந்தேக நபர்களாவர்.

சேகுவேரா இயக்கத்தின் உறுப்பினர்களென்ற சந்தேகத்தில் கல்கிசைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இந்த இருவரும்

கொழும்பு தெற்கு நீதவான் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். நீதவான் இருவரையும் தலா 200 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்களுக்காக ஆஜரான வழக்கறிஞர் திரு. குயின்ரன் பெரேரா தெரிவித்ததாவது:—

"பொலீஸார் இவர்களை கல்கிசையில் வைத்துக் கைது செய்த போது இவர்களிடம் ஆக ஒரு படமே இருந்தது. இதை வைத்துக் கொண்டு இவர்களையும் சேகுவேரா உறுப்பினர்களென கணிக்கக் கூடாது" என்றார். (க–7)

### அமெரிக்க 'அமோனியம் சல்பைட்' இறக்குமதி

அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழ் பத்தாயிரம் தொன் எடையுள்ள அமோனியம் சல்பைட் உரம் வந்து சேர்ந்துள்ளது. "சில்வர் ருெபின்" என்ற கப்பலில் இருந்து இந்த உரம் இறக்கப்பட்டது.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனம் வழங்கிய 50 லட்சம் டாலர் அபிவிருத்திக் கடனுதவி மூலம் இந்த உரம் கிடைத்ததென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை உரக் கூட்டுத்தாபனத்திற்கும், தனியார் துறை கம்பெனிகளுக்கும் வந்து சேர்ந்துள்ள இந்த உரம், இலங்கை விவசாயிகளுக்கு உடனடியாக விநியோகிக்கக் கூடிய முறையில் பொதிகளாகக் கட்டப்பட்டுள்ளன. (க)

### எதிரி விடுதலை

திருகோணமலை, ஜூன் 17

மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பித்தளைக் குமிழ் ஒன்றை வைத்து இருந்ததாக எஸ். பஸ்தியான்பிள்ளை என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கில் திருகோணமலை நீதவான் திரு. விக்ரமசேகரா எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

வழக்கு விசாரணையின் பொழுது மீன்பிடிக் கூட்டுத்தாபன சீனன்வாடிக் கிளைக் களஞ்சியப் பொறுப்பாளர் திரு. எல். எம். பெரேரா, சாட்சியம் அளிக்கையில், "எதிரி வைத்து இருந்த குறிப்பிட்ட பித்தளைக் குமிழ் என் பொறுப்பில் இருக்கவில்லை" என்றார்.

இக்கட்டத்தில் நீதவான் எதிரியை விடுதலை செய்தார். வழக்கறிஞர் பி. இரங்கநாதன் எதிரியின் சார்பில் ஆஜரானர். (க–287)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் தேர்தலில் இன்று வாக்களிப்பு

## ஹரோல்ட் வில்சனுக்கு வெற்றி வாய்ப்பு உண்டா?

லண்டன், ஜூன் 18

நாலு கோடிக்கு மேற்பட்ட பிரிட்டிஷ் மக்கள் இன்று நடைபெறும் பொதுத் தேர்தலில் வாக்களிக்க இருக்கிறார்கள். இம்முறையும் பிரதமர், ஹரோல்ட் வில்சனே பெரும் வெற்றியீட்டி புதிய அரசாங்கம் அமைப்பார் எனத் திடமாக நம்பப்படுகிறது.

பிரிட்டனின் பிரபல தேசியப் பத்திரிகைகள் நடாத்திய அபிப்பிராயத் தேர்தலில், தொழிற் கட்சியே மீண்டும் வெற்றி பெறும் எனத் தெரிய வந்துள்ளது.

பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சி, பிரிட்டனின் பொருளாதார நிலை பற்றி வெளியிட்டுள்ள அறிக்கை பற்றி இங்கு சிறு சலசலப்புத் தோன்றியுள்ளது.

கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் திரு. எட்வர்ட் ஹீத் வெளியிட்டு உள்ள இந்த அறிக்கையில், இன்றைய பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்த நிலைமை பற்றியும் தொழிற் கட்சி மீண்டும் பதவிக்கு வந்தால் அதனால் இதைச் சீர்படுத்த முடியாத நிலை ஏற்படும் என்றும் எச்சரிக்கை செய்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் பிரிட்டிஷ் மக்கள் மேலும் பல இடைஞ்சல்களுக்கு ஆளாக வேண்டி வருமென்றும் 1966-க்குப் பின் ஏற்பட்டது போன்று மீண்டும் ரூபா மதிப்புக் குறைக்க வேண்டி வரும் என்றும் திரு. ஹீத் தமது அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளார்.

கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் திரு. ஹீத்தின் கடைசிப் பேச்சு தொழிற் கட்சியினரை ஆத்திரமுறச் செய்துள்ளது. இன்று காலை நடந்த பத்திரிகை மகாநாட்டில் எதுவும் கூறாத திரு. ஹீத், கடைசி நேரத்தில்தான் ரூபா மதிப்புக் குறைப்பது பற்றிய பிரச்சினையைக் கிளப்பியுள்ளார்.

இன்று நடைபெறும் பொதுத் தேர்தல் முடிவுகள், பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் மூன்றாவது முறையாகவும் பிரதமராகும் வாய்ப்பை அளிக்கும் என்று நம்பப்படுகிறது. (க-15)

## கறிச் சட்டி காலியானது எவ்விதம்?

காத்தான்குடி, ஜூன் 17

காத்தான்குடி சென்றல் வீதியில் உள்ள ஆசிரியர் தங்கு நிலையத்தில் தங்கியிருந்த ஆசிரியர்கள் மதிய போசனத்திற்காக ஆட்டிறைச்சி சமைத்து வைத்துவிட்டு பாடசாலைக்குச் சென்றனர்.

சாப்பாட்டு நேரத்தில் கறிச்சட்டியைத் திறந்ததும் வெறுஞ் சட்டியும் ஒரு சில பான் துண்டுகளுமே அதில் காணப்பட்டன. யாரோ இனம் தெரியாதவர்கள் ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சென்ற பின்னர் கறிச்சட்டியைக் காலியாக்கியுள்ளனர்.

## பதவியேற்றார்

மந்திரி சபை விவகாரங்களின் டைரக்டராக ஜனாப் எம். எஸ். ஆலிப் நேற்று பதவியேற்றார்.

## ராஜதந்திரிகள் அறுவருக்கு நாடு திரும்ப அழைப்பு

வெளிநாடுகளில் உள்ள இலங்கை ராஜதந்திரிகள் அறுவரை உடனடியாக நாடு திரும்பும்படி இலங்கை அரசாங்கம் அழைத்துள்ளது.

இவர்களில் மூவர் தூதுவர்களாகவும் ஏனைய மூவரும் ஹைகமிஷனர்களாலும் உள்ளனர்.

மேலும் பலர் இவ்வாறு திருப்பி அழைக்கப்பட இருப்பதாக தெரிகிறது.

நேபாளத்தில் இலங்கைத் தூதுவராக இருக்கும் திரு. ரூபட் குணவர்தன, கனடாவில் ஹைகமிஷனராக உள்ள திரு. கிளெனி பீரிஸ், பர்மாவில் தூதுவராக உள்ள திரு. நந்ததேவ விஜேசேக்கர, இந்தோனேசியாவில் தூதுவராக இருக்கும் திரு. ஸ்டான்லி டி சொய்ஸா, இந்தியாவில் ஹைகமிஷனராக உள்ள திரு. சிரி பெரேரா, பாகிஸ்தானில் ஹைகமிஷனராக உள்ள சேர். ராசிக் பரீத் ஆகியோரே உடனடியாகத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். (க)

## 'எம்மைத் துன்புறுத்துவதே என் கணவரின் அன்றாட வேலை'

"குடித்து விட்டுக் கூத்தடிப்பதுவும், எம்மையெல்லாம் போட்டு அடிப்பதும், உதைப்பதுவும், சித்திரவதை செய்வதுவும் தான் எனது கணவரின் நித்திய கடமையே தவிர, எமது குடும்பத்தின் வறுமை நிலை ஒழிவதற்கான எந்த ஒரு ஆக்க வேலைகளிலும் அவர் ஈடுபடுவது கிடையாது ஐயா".

ஜீவனாம்ச வழக்கொன்றில் பத்துப் பிள்ளைகளின் தாயான ஒரு இளம் பெண் மேற்கண்டவாறு சாவகச்சேரி நீதவான் திரு. தே. விக்னராஜா முன்னிலையில் கூறினார்.

இந்த வழக்கில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த பத்து பிள்ளைகளின் தாயான இளம் பெண் பரமேஸ்வரி என்பவர் தனது கணவர் பரமசாமி என்பவர் மீது ஜீவனாம்சம் கோரி ஒரு வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை சாவகச்சேரி நீதவான் திரு. தே. விக்னராஜா விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்.

விசாரணையின் போது, வாதி தொடர்ந்து கூறியதாவது:—

"இறந்த பிள்ளைகளுடன் நான் பத்துப் பிள்ளைகளுக்குத் தாயாகி விட்டேன். ஆனால், எனது கணவரால் நான் இதுவரையில் எது வித சுகத்தையும் கண்டதில்லை. அன்று முதல் இன்று வரை, நானும் எனது பிள்ளைகளுமே எமது ஜீவியத்திற்காக உழைத்து வருகிறோம். சதா குடிப்பதும், கூத்தடிப்பதும், எம்மை அடிப்பதும், உதைப்பதும்தான் எனது கணவரின் தினசரி கடமையாகும்.

"அவருடன் நாங்கள் இருந்து இதுவரை பட்ட கஷ்டங்கள் போதும். இனிமேலும் எம்மால் கஷ்டம் அனுபவிக்க முடியாது. எனவே நானும் பிள்ளைகளும் ஒதுங்கி தனிப்பட்ட முறையில் நிம்மதியாக வாழவேண்டும் ஐயா. எனக்கும் எனது ஏழு பிள்ளைகளுக்கும் மாத்திரம் இவர் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும். அதுவே போதும். இவர் சதா வீணை அழிக்கும் பணத்தில் நூறு ரூபா மாதா மாதம் கொடுத்தால் போதும்" என்று கூறினர். நீதவான் மேல் விசாரணையை வேறு ஒரு திகதிக்கு மாற்றிவைத்தார். (க- 51)

## பிரேதப் பெட்டியை வீட்டில் வைத்திருந்தார் பிராட்லி

மயானத்தில் குழி வெட்டுபவராக இருந்த அந்தோனி பிராட்லி தன் தொழில் ஞாபகமாக ஒரு பிரேதப் பெட்டியை தனது வீட்டில் வைத்திருந்தார்.

பிரேதப் பெட்டியுடன் ஒரு மண்டை ஓட்டையும் வைத்திருந்தார். இது அவரின் காதலி ஒருத்தியை ஓடச் செய்துவிட்டது.

இப்பொழுது லொறி டிரைவராக இருக்கும் பிராட்லியின் இரண்டாவது காதலி பிரேதப் பெட்டியையோ, மண்டை ஓட்டைப் பற்றியோ கவலைப்படுவது இல்லை.

"எனது அறையில் இவைகள் இருப்பதைக் கண்ட என் காதலியின் பெற்றோர் நான் ஓர் பைத்தியம் என நினைக்கின்றனர். தற்காலிகமாக எமது காதலில் முறிவு ஏற்பட்டுள்ள போதிலும், நான் அவளை நிச்சயம் மணம் முடிப்பேன்" என்று கூறினர்.

தனது அபிமான பிரேதப் பெட்டியால் காதலிகளை இழக்க நேரிடுவதால், அப் பிரேதப் பெட்டியை குறைந்த விலைக்கு விற்க முன் வந்துள்ளார் 26 வயதான அந்தோனி பிராட்லி. (க- 15)

## இரத்தினபுரி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டதென்றும் திரு. விஜேசுந்தர தமது ஆட்சேபத்திற்கான காரணம் காட்டியுள்ளார்.

திரு. அழகக்கோனின் தெரிவை ஆட்சேபித்து மன்னார் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்த வேட்பாளரான ஜனாப் அப்துல் ரஹீம் வழக்கு தாக்கல் செய்தார்.

வாக்குச் சீட்டுக்கள் மீண்டும் எண்ணப்பட வேண்டுமென மனுவில் கோரியிருக்கும் ஜனாப் ரஹீம், தம்மைப் பற்றி பிழையான தகவல்களை திரு. அழகக்கோன் வெளியிட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ர)

## கார் திருட முயன்றவர் கான்ஸ்டபிளை தாக்கினர்?

மோட்டார் காரைத் திருட முயன்றவர்களுடனான மோதலில் காயமடைந்தாராம் கான்ஸ்டபிள் ஒருவர். கார் தப்பிவிட்டது கைது செய்யப்பட்டுள்ளார் ஒருவர்.

காயமடைந்த பொலீஸ் கான்ஸ்டபிள் பொரளை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்தவராவார். இவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ள ஒருவர் காரைத் திருட முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:—

சென்ற திங்கட்கிழமை இரவு கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த வசிதராஹாமி என்பவருக்குச் சொந்தமான "ஶ். எப். 5604" இலக்க மோட்டார்கார் அவரது வீட்டின் முன்புறத்தில் நிறுத்தப்பட்டிருந்ததாம். அதன் சாரதி அவ்வேளையில் காரினுள் நித்திரை செய்து கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அவ்வேளையிலே தம் கைவரிசையைக் காட்ட முற்பட்ட திருடர்கள் பொலீஸாரிடம் வகையாக மாட்டுப்பட்டுள்ளார்கள்.

பொரளைப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. சி. ஏ. கபூர் புலன்விசாரணை நடாத்தி வருகிறார். (க- 7)


### பின்னல் புத்தகம்

இன்று வனிதையர்களிடத்தில் பிரபல்யம் அடைந்து வரும் ஒரு மோஸ்தராகும். பின்னப்பட்ட சட்டை, சாரி போடர்கள், பின்னலினால் அலங்கரிக்கப்பட்ட கவுண், பாவாடை, சட்டை கழுத்துக்கள், இப்பின்னல் முறையைக் கொண்டு பிரட்ஸ் தொப்பி, மவ்லர், சுவீட்டர், பெனியன், கதவு, புடவை, நாற்காலி கவர், டீப்போ புடவை என்பனவற்றை அமைத்துக் கொள்ளலாம். பூரான் பின்னல், வல்லாரி இலை, கொச்சிக்காய் பூ, விசிறி மோஸ்தர்கள், ஏணி, பாகக்காய் பூ, தாமரை இதழ், ரோஜாப் பூ, தெட்டின் மலர்கள், ஆகிய மோஸ்தர்கள் பின்னும் விதங்களை விளக்கமாக விவரிக்கும், இப்புத்தகத்தின் விலை ரூ. 2/50 தபால். செலவு 50 சதம். இத்துடன் கொண்டை மோஸ்தர்கள், கவுண், சட்டை பேத் மோஸ்தர்கள் அடங்கிய ஒரு புத்தகம் இலவசமாக கொடுக்கப்படும். பணம் கட்டி பெறுவதற்கு அனுப்பி வைக்கப்படும்.

நிர்வாகி, தையல் பகுதி,

**CENTRAL SUPPLIERS**

**Dehiwala.**





### குறைந்த விலைக்கு ஒரு ரேடியோ

பயிற்சியாளர்களே! ஜப்பானின் சிறந்த ரேடியோ நிபுணரினால் எழுதப்பட்ட ரேடியோ தயாரிப்பை இலகுவாகக் கற்றுக்கொள்ளக் கூடிய ரேடியோ கைப் புத்தகம் வெளி வந்துவிட்டது. ரேடியோ, டிரான்ஸிஸ்டராக மாற்றுமலே ஒரு துண்டு உருக்கினால் கொயிலை சுற்றி 6 டோர்ச் பாட்டரிகளினால் H.T. 90 L.T. 1.5. தயாரித்து இயங்கச் செய்வது. பாட்டரி தயாரிப்பு, டிரான்ஸிஸ்டர் செய்வது, இயர்போன் முதல் பெரிய ஒலி பெருக்கி ரேடியோ வரை செய்யும் முறைகள் 10 பாடங்களினால் கற்பிக்கும் புத்தகம் ரூ. 4-00. தபாலுக்கு 75 சதம். அத்துடன் பாட்டரியில்லாமல் கேட்கும் சர்கிட் இரண்டு இலவசம். ஒரு சில குறிப்பிட்ட தொகை மாத்திரமே கையிருப்பில் உண்டு. இன்றே கேளுங்கள்.

Director, (Technical Dept) (TH)

Central Suppliers, Dehiwala.


இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 18 ஜூன் 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org